//

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.42/2015

2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06-ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4-ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்ரீராம் (Pw2) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

நாள்.06.02.2025

வா.சா.2

முதல் விசாரணை :

நான் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்கிறேன். நான் மண்டபம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024, 12 வது மாதத்திலிருந்து பணிபுரிந்து வருகிறேன். காவல் ஆய்வாளருககு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பெயரில் நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க வந்துள்ளேன். சம்மனில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். 2017 ம் வருடம் மண்டபம் காவல்நிலையத்தில் பணியில் இல்லை. அந்த வருடத்தில் பணியில் இருந்த காவல் ஆய்வாளர், சார்பு ஆய்வாளருக்கு அழைப்பாணையில் கண்ட புகார் விபரம் தெரியும். நீதிமன்றத்தில் இருந்து 08.05.2017 ம் தேதி கொடுத்த புகார் சம்பந்தமான ஆவணங்களை கொண்டு வர அழைப்பாணை வந்தது. 08.05.2017 ம் தேதி புகார் மனு எங்கள் காவல்நிலையத்தில் இல்லை. பதிவு தபாலில் வரக்கூடிய புகார் சம்பந்தமான விபரங்களை நாங்கள் CSR ல் entry செய்வோம். அந்த CSR ஐ கொண்டு வரவில்லை. அந்த CSR ஐ கொண்டு வந்தால் புகார் மனு சம்பந்தமான விபரம் தெரியும். என்னிடம் காட்டப்படும் புகார் மனு பர்வதவர்த்தினி என்பவரால் மண்டபம் காவல் ஆய்வாளருககு அனுப்பப்பட்டது ஆகும். அந்த புகார் மனுவில் 08.05.2017 ம் தேதி என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த புகாரை பதிவு தபாலில் அனுப்பியதற்கு 08.05.2017 தேதி உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் அட்டைதான் அந்த புகார் மனுவை வாங்கிக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை ஆகும். அதில் எங்கள் காவல்நிலைய அதிகாரி பெற்றதாக 1361 நம்பர் உள்ளது. காவலர்களுக்கு பொதுவாக ஒரு நம்பர் கொடுக்கப்பட்டுள்ளது. 1361 நம்பர் உள்ள காவல் அதிகாரி யார் என்று அந்த நம்பரை வைத்து தெரிந்துகொள்ளலாம். என்னிடம் காட்டப்படும் ஒப்புகை அட்டை இந்திய அரசால் வழங்கப்பட்டது ஆகும். புகார் மனுவை பெற்றதற்கான ஒப்புகை தான் ஒப்புகை அட்டை ஆகும். அந்த வகையில் புகார் மனு, அஞ்சலக ரசீது, ஒப்புகை அட்டை எங்கள் காவல்நிலையத்தில் பெறப்பட்டதாகும் எனில் ஒப்புகை அட்டை மட்டும் தான் பெறப்பட்டது ஆகும். புகார்

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.02.06 17:40:55 +0530

மனுவை காவல்நிலையத்தில் பெற்றுக்கொண்டு தான் ஒப்புகை அட்டையில் கையொப்பம் செய்வார்கள். புகார் மனு சம்பந்தமாக எங்கள் காவல்நிலையத்தில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த காலகட்டத்தில் பணிபுரிந்த ஆய்வாளருக்கு தான் அந்த விபரங்கள் தெரியும். புகார் மனு சம்பந்தமாக மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு சம்மன் அனுப்பி விசாரணை செய்வது வழக்கம் ஆகும். **புகார் மனுவில் உள்ள ஒப்புதல் அட்டை ச.சா.ஆ.1** ஆகும்.

<u>**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

புகார் மனுவில் 08.05.2017 ல் பர்வதவர்த்தினி என்பவரால் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். PSO பிரிவு.224 ன் படி எந்தவொரு புகார் மனு பெற்றவுடன் மூன்று வருடத்தில் அழித்துவிடவேண்டும் என்றால் சரிதான். 08.05.2017 ம் தேதி பெற்ற புகார் மனுவும் PSO பிரிவு.224 ன் படி புகார் மனு கோப்புகள் அழிக்கப்பட்டுள்ளதாக உதவி காவல் கண்காணிப்பாளர் குறிப்பாணை அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். அதில் காவல் கண்காணிப்பாளருக்காக கூடுதல் கண்காணிப்பாளர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த **குறிப்புரை பி.வா.சா.ஆ.6** ஆகும். அந்த கோப்பின் அடிப்படையில் பர்வதவர்த்தினியின் மனுவில் எந்தவிதமான முடிவு ஏற்பட்டது என்பதை இப்போது யாரும் கூற முடியாது என்றால் சரிதான்

<u>**2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

வாதி தரப்பில் காட்டப்பட்ட புகார் மனு தான் எங்கள் காவல்நிலையத்திற்கு வந்தது என்று என்னால் உறுதியிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். புகாரை வழக்கிற்காக பொய்யாக வேறு மனுவை அனுப்பிவிட்டு இந்த மனுவை அனுப்பியதாக சொல்வதற்கு வாய்ப்புள்ளது என்றால் இது சம்பந்தமாக எனக்கு தெரியாது.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.02.06 17:41:00 +0530